
Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 11 2024

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 11, 2024 | ஒளி: 10 கதிர்: 69 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# ரத்தன் டாட்டா காலமானார்

இந்தியாவின் மகத்தான தொழிலதிபர் ரத்தன் டாடா வயது மூப்பு - உடல்நலக்குறைவு காரணமாக, புதன்கிழமை (09) இரவு காலமானார் இறக்கு போது வயது 86.

( கட்டுரை P6)



# பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தவிர்த்தார் விமல்

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை அறிவித்துள்ளது.

“ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியத்தில் வேரூன்றிய ஓர் அரசியல் இயக்கம் என்ற வகையில், மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றுப் பாரம்பரியத்தை மதிக்கும் மற்றும் உரிமையுள்ள ஓர் இயக்கம் என்ற வகையில், ஜனாதிபதியை ஆட்சிக்குக் கொண்டு வந்த ஆணையைப்

தொடர்ச்சி P2

# வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவு

2024 ஆம் ஆண்டு, பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் ஒக்டோபர் 4ஆம் திகதி ஆரம்பமானது. வேட்பு மனுத்தாக்கல், வெள்ளிக்கிழமை (11) நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும்.

வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கைகள் 22 மாவட்டச் செயலாளர் அலுவலகங்களில் முன்னெடுக்கப்பட்டன என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# சம்பிக்க போட்டியிடார்

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகுவதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். சமகி ஜன சந்தனய கட்சி தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், பொதுத் தேர்தலில் ஐக்கிய குடியரசு முன்னணி எந்த வேட்பாளரையும் நிறுத்தாது என்றார்.

தொடர்ச்சி P2


## முன்னாள் இராஜாங்க அமைச்சரின்

# 3 வங்கிக் கணக்குகளை முடக்க உத்தரவு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுபா பஸ்குவாலுக்குச் சொந்தமான இரண்டு வங்கிக் கணக்குகளை மூன்று மாதங்களுக்கு முடக்கி வைக்க கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதியை சந்தித்தார்

அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்

அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர், (Admiral Steve Koehler, a 4-star U.S. Navy Admiral and Commander of the U.S. Pacific Fleet) ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (10) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

தொடர்ச்சி P2



# மண்சரிவு எச்சரிக்கை

காலி, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் குறித்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் முன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் தொடங்கொட, புலத்சிங்கள, மத்துகம, ஹொரண மற்றும் வல்லவிட்ட ஆகிய பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




# “இலங்கையின் பொருளாதாரம் 4.4 சதவீதம் வளர்ச்சியை எட்டும்”

இலங்கையின் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 4.4 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது முந்தைய முன்னறிவிப்புகளை விஞ்சும் என்று உலக வங்கி (WB) வியாழக்கிழமை (10) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# “நாட்டுக்காக உழைக்க வேண்டிய நேரம்”

கட்சியாகவும் கூட்டணியாகவும் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் கொழும்பு மாவட்டத்திற்கான வேட்புமனுக்களை கையளித்தோம். இத்தேர்தலில் மக்கள் வழங்கும் ஆசிர்வாதங்களின் அடிப்படையில் வெற்றி பெற்று நல்லதொரு தாய்நாட்டைக் கட்டியெழுப்ப, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான யுகத்திற்கு வழிவகுப்போம்.

தொடர்ச்சி P2




# மூன்று ராஜபக்ஷக்கள் போட்டியிட மாட்டார்கள்

நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிடவோ, தேசியப் பட்டியலில் இடம்பெறவோ மாட்டார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# கட்டுப்பணம் செலுத்தினார் வைத்தியர் அருச்சுனா

நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தினை வைத்தியர் அருச்சுனா செலுத்தினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை (10) கட்டுப்பணத்தினை செலுத்தினார்.




# கடவுச்சீட்டுக்களில் மாற்றம்

64 பக்கங்களை கொண்ட என்-சீரிஸ் கடவுச்சீட்டை (சாதரண கடவுச்சீட்டு) 48 பக்கங்கள் கொண்ட ஜீ-சீரிஸ் கடவுச்சீட்டுகளாக மாற்ற குடிவரவுத் துறையின் செயற்குழுக் கட்டுப்பாட்டாளர் ஜெனரலுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்டமா அதிபர் மற்றும் பதில் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் சார்பில் முன்னிலையான

தொடர்ச்சி P2

# சேமசிங்கவும் போட்டியிடார்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த வருட பொருளாதார நிலைமைகள் காரணமாக நாடு பல்வேறு பொருளாதார பாதிப்புகளை

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தவிர்த்தார் விமல்

பாதுகாப்பதற்கும் அந்த ஆணையை வழங்கிய மக்களின், எதிர்பார்ப்புகளுக்கு ஆதரவாக நிற்பதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் " என வீரவன்ச தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதை உறுதிசெய்வதை இலக்காகக் கொண்டு, பெரும்பான்மையை அடையாத பட்சத்தில் முடிவுகளைப் பாதிக்கக்கூடிய ஏனைய கூட்டணிக் கட்சிகளின் ஆதரவில் தங்கியிருக்காமல் ஆட்சியமைக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சியின் அனைத்து மட்டத்தினருடனும் கலந்தாலோசித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த வீரவன்ச, எதிர்வரும் பொதுத் தேர்தல்கள் தொடர்பான கொள்கைப் பிரகடனத்தை அடுத்த சில நாட்களில் கட்சி வெளியிடும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி அனுர திஸாநாயக்கவை "இரண்டாம் கோட்டாபய" ஆக்குவதற்கான ஏகாதிபத்திய சதியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அவ்வாறான முயற்சிகளுக்கு தேசிய சுதந்திர முன்னணி அதில் ஒரு கட்சியாக இருக்காது எனவும் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

# வேட்புமனுத்தாக்கல் இன்றுடன் நிறைவு

அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும், வெள்ளிக்கிழமை (11) நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும்.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்துக்கு 196 பேர், வாக்களிப்பின் ஊடாக 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஏனைய 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மண்சரிவு எச்சரிக்கை

மேலும், காலி மாவட்டத்தின் நாகொட மற்றும் எல்பிட்டிய, மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ ஆகிய பகுதிகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் வசிப்பவர்கள் திடீரென தோன்றும் நீர் நிலைகள் மற்றும் மண்ணில் விரிசல் ஏற்படுவதைக் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# 3 வங்கிக் கணக்குகளை முடக்க உத்தரவு

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சரின் இரண்டு வங்கிக் கணக்குகள் மூன்று மாத காலத்திற்கு முடக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் ஒரு பகுதியாக, 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53(1) பிரிவின் படி ஆணைக்குழுவினால் இந்த உத்தரவு பெறப்பட்டுள்ளது.

# அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதியை சந்தித்தார்

இந்து சமுத்திரத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களுக்கு முகங்கொடுத்தல், கடல்சார் பிராந்தியங்கள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் போன்ற சர்வதேச அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த அட்மிரல் கோஹ்லர், போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளையும் பாராட்டினார்.

கடற்படைப் பிரிவின் மனிதவள பயிற்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கப்படும் என அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

# "இலங்கையின் பொருளாதாரம்...

உலக வங்கியின் 'எதிர்காலத்திற்கான திறப்பு' என்ற தலைப்பிலான இலங்கையின் இரு ஆண்டுகால மேம்படுத்தல், எவ்வாறாயினும், மீட்சி பலவீனமாக உள்ளது என்றும், பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுதல், கடனை வெற்றிகரமாக மறுசீரமைத்தல் மற்றும் நடுத்தர கால வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் தொடர்ச்சியான கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் சார்ந்துள்ளது என்றும் எச்சரித்துள்ளது.

கொழும்பில், வியாழக்கிழமை (10) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கருத்துரைத்த போதே உலக வங்கியின் பிரநிதிகள் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

# மூன்று ராஜபக்ஷக்கள் போட்டியிட மாட்டார்கள்

அக்கட்சியின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட நாமல் ராஜபக்ஷ தேர்தலில் நேரடியாக போட்டியிடாமல் அவரது பெயர் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

எனினும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சசீந்திர ராஜபக்ஷ மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

# "நாட்டுக்காக உழைக்க...

ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் மையமாகக் கொண்டு ஒன்றாய் இணைந்து புதிய யுகத்தை உதயமாக்குவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்துடன், நியமிக்கப்பட்ட ஜனாதிபதியுடன் இணைந்து, நாட்டின் நலனுக்காக 220 இலட்சம் மக்களின் நலனுக்காக நாட்டுக்காக ஆற்ற வேண்டிய சிறந்த பங்களிப்பை வழங்குவோம். இதுவரை இருந்து வந்த நாகரிகமற்ற அரசியல் கலாசாரத்தை புறந்தள்ளிவிட்டு சகோதரத்துவத்துடனும் ஒருநிலைப்பட்டும் செயற்படுவோம் என்றார்.

2028 க்குள் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதால், சுருங்கிப்போயுள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இது அனைவரினதும் பொறுப்பு என்பதனால், 220 இலட்சம் மக்களும் ஒன்றாய் இதற்காக உழைக்க வேண்டும். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதாகும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான, ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன. இதன் பிரகாரம், நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள கொழும்பு மாவட்ட செயலகத்தில் வைத்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோரால் குறித்த வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேட்பாளர் தெரிவில் கடும் போட்டி காணப்பட்டது. பெண்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 25% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதிகளவான பெண் பிரதிநிதித்துவத்தை பெற்றுத் தருவோம் என்று எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# சேமசிங்கவும் போட்டியிடார்

சந்தித்ததாகவும் பின்னர் முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடும் பொருளாதாரமும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கும் போது அதன் பலன்கள் மக்களுக்கே கிடைக்கும் என்பதால் அதனை மக்கள் புரிந்து கொள்ளவார்கள் தான் எதிர்ப்பார்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஒரு நாடு என்ற வகையில் ,செய்த தியாகங்கள்



மற்றும் செய்த சாதனைகள் குறித்து மக்களுக்கு சரியான புரிதல் இல்லை என தான் நம்புவதாகவும், அதை இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் காட்டுவதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, கடந்த அரசாங்கத்தினால் பெரும் முயற்சியுடன் கட்டமைக்கப்பட்ட கொள்கை ரீதியான அரசியல் பாதையை மக்கள் நிராகரித்தமையால் விரக்தியடைந்துள்ளதால் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில்லை எனவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# கடவுச்சீட்டுக்களில் மாற்றம்

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தனவின் முன்மொழிவுகளை பரிசீலித்த பிறகு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு, மொஹமட் லஃபர் தாஹிர் மற்றும் பி. குமரன் ரட்ணம் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போது இந்த அறிவிப்பு புதன்கிழமை (10) விடுக்கப்பட்டுள்ளது.

ஏழு இலட்சத்து 50,000 என்-சீரிஸ் கடவுச்சீட்டுகளை வழங்கும் 02 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தேவையான வசதிகள் இல்லாததால், அந்த கடவுச்சீட்டை ஜீ-சீரிஸுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு தெரியபடுத்தியுள்ளார்.

அண்மையில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் (750,000) என்-சீரிஸ் கடவுச்சீட்டுக்களை வாங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் லாஃபர், எனிக் லங்கா தனியார் நிறுவனம் மற்றும் அதன் நிறைவேற்றுத் தவிசாளரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்து, அமைச்சரவை தீர்மானம் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர் நடைமுறையை மீறும் ஊழல் கொடுக்கல் வாங்கல் என குறித்த தடை உத்தரவை பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# காதலனை சந்தித்த மனைவியை, ஆயுதத்தால் தாக்கிய கணவன்

தலவாக்கலை, டயகம மேற்கு பகுதியில், குடும்ப தகராறு காரணமாக கணவன், மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்தியுள்ள சம்பவம் புதன்கிழமை (10) பதிவாகியுள்ளது.

மூன்று பிள்ளையின் தாயொருவர் (26 வயது) இவ்வாறு கணவனின் (33 வயது) தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவன் மனைவி இடையே செவ்வாய்க்கிழமை (08) மாலை ஏற்பட்ட தகராறின் பின்னர் தொழிலுக்காக கொழும்புக்குச் செல்வதாகக் கூறி மனைவி வீட்டை விட்டு வெளியேறி தனது முன்னாள் காதலனின் வீட்டிற்கு சென்று அன்றிரவு தங்கியுள்ளார்.

எனினும், வீட்டிலிருந்து வெளியேறி சென்றதிலிருந்து




புதன்கிழமை(09) காலை வரை மனைவியிடம் இருந்து கணவனுக்கு தொலைபேசி அழைப்பு வராத காரணத்தால் கணவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தில் திடீரென அதே பகுதியை சேர்ந்த முன்னாள் காதலன் வீட்டிற்கு சென்று பார்த்தபோது காதலன் தொழிலுக்குச் சென்ற நிலையில் மனைவி அவரது வீட்டில் இருந்ததை அவதானித்த கணவன், மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் அயலவர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் கத்தியுடன் சரணடைந்த நிலையில், டயகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இடையில் சந்தித்தவள் குழந்தையை பரிசளித்துவிட்டு மாயமானாள்

மூன்று வயது குழந்தையின் தாயான இளம் பெண்ணொருவர் குழந்தையை இளைஞன் ஒருவரிடம் தனியாக விட்டு கையடக்கத் தொலைபேசியையும் திருடிச்சென்றுள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் தனிப்பட்ட தேவைக்காக கொழும்பு நகருக்குச் சென்ற போது, கொழும்பு கிராண்ட் பாஸ் பகுதியில் வைத்து இந்த பெண்ணை சந்தித்து இருவரும் தங்களது கைத்தொலைபேசி இலக்கங்களை பரிமாறிக்கொண்டதாகவும், இருவரும் சில நாட்களாக காதலித்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கடந்த 8ஆம் திகதி நிட்டம்புவ வட்டுபிட்டிவல பகுதியில் உள்ள இளைஞனின் அறைக்கு , தனது குழந்தையுடன் வந்து இரண்டு நாட்கள் கழித்து, குழந்தையை இளைஞன் அருகில் வைத்துவிட்டு இளைஞனின் தொலைபேசியையும் திருடி தப்பிச் சென்றுள்ளார் .

குழந்தையை அழைத்துச் செல்ல குறித்த பெண் வருவாள் என்று எண்ணிய இளைஞன் குழந்தையைப் பாதுகாப்பதற்காக வேலைக்கும் செல்லாமல் அறையிலேயே இருந்துள்ளார்.

இதேவேளை, குடியிருப்பு அறையில் ஒரு குழந்தையும் இளைஞனும் தனியாக இருப்பதாக 119 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலக்கமைய, பொலிஸார் குறித்த இளைஞனின் அறைக்கு சென்று விசாரணைகள் மேற்கொண்டுள்ளதுடன் குழந்தை பொலிஸ் காவலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.


குழந்தையைத் விட்டுச் சென்ற நாள் முதல் பெண்ணின் கைத்தொலைபேசி அணைக்கப்பட்டுள்ளது என இளைஞன் பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்

நிட்டம்புவ ஓர்வட்வத்த கிராமத்தை சேர்ந்த குறித்த இளைஞன், வட்டுபிட்டிவலயில் உள்ள குடியிருப்பு அறையொன்றில் தங்கி அலவ்வ நகரில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரிபவர் என்பது குறிப்பிடத்தக்கது.










# வெண்ணைத்தாழி சேவை திருவிழா...

■ புகஜிந்தன்வ

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவத்தின் ஏழாம்நாள் திருவிழாவான வெண்ணைத்தாழி சேவை திருவிழா, செவ்வாய்க்கிழமை (09) அன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.





ஊடகவியலாளரான சண்முகம் தவசீலனுக்கு

# எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது கடற்படை புலனாய்வாளர் தொடுத்த வழக்கு வியாழக்கிழமை (10) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

வழக்குத் தொடுனரான கடற்படை புலனாய்வாளர்களின் சார்பில் சாட்சியம் அளிப்பதற்காக கடற்படை புலனாய்வாளர் வருகை தராததால் மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு 2025 ஜனவரி 16ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர் முல்லைத்தீவு பொலிஸாரினால் 20.04.2019 கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் வழக்கு வியாழக்கிழமை (10) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது





ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பாக சட்டத்தரணி வீ.எஸ். எஸ் தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தார்.

இதன் போது செல்வபுரம் பேரூந்து நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை அடையாளப்படுத்த முற்பட்டவேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என வினவியபோது, அதற்கு அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து, முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமாகியுள்ளது. குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படையினை சேர்ந்தவரா என வினவியபோது, அவர் தங்களுடைய நபர் என கடற்படையினர் தெரிவித்ததுடன், அவரை குறித்த இடத்தில் வருகை தந்த காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளரை பழிவாங்கும் நோக்கில் மறுநாள் மாலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் தன்மீது தாக்குதல் நடத்தியதாகவும் அரச கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் முறைப்பாடுசெய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொரடந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரத்தன் டாட்டா உதிர்த்த

# 10 உத்வேக மேற்கோள்கள்



இந்தியாவின் மகத்தான தொழிலதிபர் ரத்தன் டாடா வயது மூப்பு - உடல்நலக்குறைவு காரணமாக, தனது 86 வயதில் மறைந்தார்.

இந்திய தொழில் துறையில் அவரது பங்களிப்பு மிகப் பெரியது. குறிப்பாக, சமூக நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அவரது தொழில் அணுகுமுறை என்றென்றும் முன்னுதாரணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய மதிப்பு மிக்கவர் உதிர்த்தவற்றில் 10 முக்கிய மேற்கோள்கள்.

“அதிகாரமும், செல்வமும் எனது முக்கியப் பங்குகளாக இருந்ததே இல்லை!”

“நீங்கள் வேகமாக நடக்க விரும்பினால் தனியாக நடப்பீர்; ஆனால் நீண்ட தூரம் நடக்க விரும்பினால் இணைந்து நடக்க வேண்டும்.”

“உங்கள் மீது வீசப்பட்ட கற்களைக் கொண்டு ஒரு நினைவுச் சின்னத்தை கட்டி எழுப்புங்கள்.”

“வெற்றியாளர்கள் என்னை ஈர்ப்பார்கள். ஆனால், அவர்கள் வெற்றிக்கான பாதை இரக்கமற்றதாக இருந்தால் நான் அவர்களைக் கண்டுகொள்வதில்லை.” “வாழ்க்கை யில் ஏற்ற த் தாழ்வுகள் முக்கியம். அவைதான் நம்மை முன்னே நகர்த்திச் செல்லும். ஈ.சி.ஜி-யில் கோடுகள் நேராக இருந்தால் நாம் உயிருடன் இல்லை என்று அர்த்தம்.”

“வாழ்வில் பொருள் சார்ந்த விஷயங்கள் முக்கியமே அல்ல. உங்களை நேசிப்பவர்களின் நலன்தான் முக்கியம். என்றாவது ஒருநாள் அதை நீங்கள் உணர்வீர்கள்.”

“வேலை - வாழ்க்கை சமநிலையில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் வேலை - வாழ்க்கை ஒருங்கிணைப்பில் நம்பிக்கை கொண்டுள்ளேன். உங்கள் வேலையையும் வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதாக ஆக்குங்கள்.”

“தங்களைவிட திறமையான உதவியாளர்கள், பணியாளர்கள் உடன் இருப்பதை உறுதி செய்பவர்கள்தான் சிறந்த தலைவராக இருக்க முடியும்.”

“சவால்களை எதிர்கொள்வதில் விடாமுயற்சியுடனும், நெகிழ்ச்சியுடனும் இருங்கள், ஏனென்றால் அவைதான் வெற்றியின் கட்டுமானத் தொகுதிகள்.”

“மற்றவர்களுடனான உங்கள் தொடர்பில் கருணை, பச்சாத்தாபம் மற்றும் இரக்கத்தின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்.”

# பேருந்து தீப்பற்றி எரிந்தது



இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் மாதம்பே பகுதியில் தனியார் பேருந்து ஒன்று தீப்பற்றி எரிந்துள்ள சம்பவம் வியாழக்கிழமை (10) காலை இடம்பெற்றுள்ளது.

வியாழக்கிழமை (10) காலை 07.30 மணியளவில் எம்பிலிப்பிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

எனினும், பயணிகளுக்கு எவ்விதமான பாதிப்புகளோ ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# 600,000 குளிசைகளுடன் மன்னார் நபர் கைது

இளைஞர்கள், பாடசாலை மாணவர்களை குறிவைத்து 60 மில்லியன் ரூபாய் பெறுமதிமிக்க 600,000 போதை குளிசைகளை விற்பனைச் செய்த நபரொருவர் இலங்கை கடற்படை,பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து குளிசைகளை கடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியையும் பொரளை பிரதேசத்தில் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னார் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அவர், கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



## பதில் பிரதம நீதியரசர் பதவிப்பிரமாணம்

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினீ பெர்னாண்டோ வியாழக்கிழமை (10) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

# ரயில் மோதி குடும்பஸ்தர் மரணம்

■ எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் ரயிலல் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருக்கள் கிணற்றடி வீதி, அளவெட்டி பகுதியைச் சேர்ந்த கந்தையா இலங்கேஷ்வரன் (வயது 58) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் ஒரு பிள்ளை கனடாவிலும், மற்றைய பிள்ளை இந்தியாவிலும் வசித்து வருகின்ற நிலையில் குறித்த நபர் செவ்வாய்க்கிழமை (09) மாலை, சுன்னாகம் - மயிலணி பகுதியில் உள்ள,தனது தாயார் வீட்டுக்கு நடந்து சென்றுள்ளார்.


சுன்னாகம் பகுதியில் வைத்து ரயில் தண்டவாளத்தை கடக்க முற்பட்ட வேளை ரயில் அவர் மீது மோதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# விறகு லொறி மோதியதில் சிறுவன் பலி: சிறுமிக்கு காயம்

■ ஆ.ரமேஸ் வலப்பனை-கண்டி பிரதான வீதியில் வலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட “விஷன் மதர்” ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் (09) மாலை 6 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில், சிறுவன் பலியானதுடன், சிறுமி காயமடைந்துள்ளார் என வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பகுதியிலிருந்து வலப்பனையை நோக்கி பயணித்த விறகு ஏற்றும் பார ஊர்தி (லொரி) ஒன்று கட்டுப்பாட்டை மீறி, இரண்டு முச்சக்கரவண்டிகளில் மோதுண்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த 8 வயதுடைய சிறுவன் வலப்பனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார். 14 வயதுடைய சிறுமி,நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.




## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

கம்பனியின் பழைய பெயர்: டெராபியூடிக் (பிரைவட்) லிமிடட்

கம்பனியின் புதிய பெயர்: ஈஸ்ட் கோஸ்ட் மெங்குரூவ்ஸ (பீவீஐ) எல்டீடி

பதிவு அலுவலக முகவரி: 4வது மாடி, இல.100/1, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.

கம்பனியின் இலக்கம்: பீவீ 00267703

மாற்றம் நிகழ்ந்த திகதி: 11.09.2024

**எஸ் பி கோபரேட்ஸ் (பிறைவட்) லிமிடட்**
**கம்பனியின் செயலாளர்கள்**

# காப்பாற்ற ஆலோசனை வழங்க வேண்டியது கடமையாகும்

உலகளாவிய மனநலக் கல்வி, விழிப்புணர்வு மற்றும் சமூக மனப்பான்மைக்கு எதிராக வாதிடும் நாளாக ஆண்டுதோறும் ஒக்டோபர் 10 அன்று உலக மனநல நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. மனநலம் என்பது ஒரு நபர் எந்த அளவிற்கு பைத்தியமாக இருக்கிறார் என்று வரையறுக்கப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ ஒரு பைத்தியக்காரத்தனம் இருக்கும். இந்த பைத்தியக்காரத்தனம் சமூக சக்திகளாலும் சுயக்கட்டுப்பாட்டாலும் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஆனால் ஒரு நபர் சமூகத்திற்கோ அல்லது தமக்கோ தீங்கு விளைவிப்பதற்காக பைத்தியம் பிடிக்கத் தொடங்கினால், அது மன ஆரோக்கியத்தின் முறிவு என்று அழைக்கப்படலாம்.

பல காரணங்களை முன்வைத்து, இன்றேல் காரணங்களை சொல்லாமல் கொல்லமால், பலரும் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்கின்றனர்.

மதவெறி இல்லாத யாரும் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்வதில்லை. மிகவும் புத்திசாலியான ஒருவர் கூட தற்கொலை செய்து கொண்டால், அவர் அல்லது அவள் பைத்தியமாகிவிடுவார்கள்.

இலங்கையின் மன ஆரோக்கியத்தின் தன்மையை சுகாதார அமைச்சு ஆராய்ந்துள்ளது, மக்களில் 7 சதவீதமான மக்கள் மன அழுத்தத்தில் உள்ளனர். அவர்கள் ஒரு மாதத்திற்குள் ஏற்பட்ட ஏமாற்றங்களால் துயரத்தில் வாழ்கின்றனர். நிலைமை மிகவும் மோசமாக இருக்கும்போதுதான் தற்கொலை செய்து கொள்கிறனர்.

அதேசமயம், இந்நாட்டு மக்களில் 4.1 சதவீதமானோர் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ள நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை செயல்படுத்துவதில்லை.

இதேவேளை, யாரிடமும் உதவி கிடைக்காது என நினைத்து தோற்றுப்போனவர்களாக 3.1 சதவீதமானோர் வாழ்கின்றனர்.

இவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் நாள் வெகு தொலைவில் உள்ளது.

இலங்கையில் 1996 ஆம் ஆண்டில், சுமார் 45,000 பேர் பல்வேறு மனநலப் பிரச்சினைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

1999 இல், இந்த எண்ணிக்கை 47,500 ஆக இருந்தது. 2008 இல், இது 41,000 ஆகக் குறைந்துள்ளது.

2013ல், இது மீண்டும் 47,500 ஆக உயர்ந்தது. கண்டறியப்பட்ட பின்னர், இவர்கள் மனநல கோளாறு உள்ளிட்ட ஏழு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, உடல் ரீதியாக ஏற்படும் எந்த நோயும் மனதை பாதிக்கிறது.

ஒருவருக்கு ஒரு காலை இழந்தால், அது ஒரு பெரிய சுமை.

எனவே, சில சந்தர்ப்பங்களில், நபர் தன்னுயிரை மாய்த்துக்கொள்வது பற்றி நினைக்கிறார்.

பாடசாலை மாணவர்களில் பல மனநலப் பிரச்னைகள் உள்ளன. சிலர் தேர்வில் தோல்வி அடையும் பயத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றனர்.

மற்றவர்கள் தேர்வில் தோல்வியடைந்ததால், வறுமையின் காரணமாக பெற்றோர்கள் அடிக்கடி சண்டை போட்டால், காதல் முறிந்தால், தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். தங்கள் பிரச்சினைக்கு தன்னுயிரை மாய்த்தலை முதல் தீர்வாக பார்க்கிறார்கள். தன்னுயிரை மாய்த்தல் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ள முடியாத கடைசி முயற்சியாக கருதுகிறார்கள். வருங்கால சந்ததியினரை அந்த முயற்சியில் இருந்து காப்பாற்ற ஆலோசனை வழங்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பண்டைய காலத்தில் உலக நாடுகளிடையே கொடிய யுத்தங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். செழிப்பான நாடுகள், வேண்டுமென்றே சிநாடுகளுக்கிடையில் யுத்தங்களை உருவாக்கிவிடும். இதனால், நன்கு ஆட்சிசெய்த நாடுகள் தோற்பதும் உண்டு. பின்னர் அந்த நாட்டிலுள்ள வளங்கள் சூறையாடப்படும்.

அந்தச் செல்வங்களை தனது நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். தனது நாட்டில் சிறப்பான ஆட்சியும் கைப்பற்றிய நாட்டில் கொடுங்கோல் ஆட்சியும் நடைபெறும். தோல்வி கண்ட அரசன், பிறநாட்டின் உதவியுடன் மீண்டும் தனது நாட்டைக் கைப்பற்றுவான்.

இதே முறையில்தான் ஒருநாட்டில் புரட்சியை ஏற்படுத்தியவர்கள், அந்த நாட்டை சர்வாதிகார நாடாக மாற்றிவிடுவார்கள். மக்களுக்காக உழைக்கின்றோம் என்பார்கள். ஆனால் மக்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இடையில் வாழும் மக்கள் நலிந்து, நசுங்கிப் போய்விடுவார்கள். நீதி, நியாயம், பொய் எல்லாமே மாறி,மாறி வந்துபோகும்.

யுத்தக் கிலி ஒருபோதும் முழுமையாக அகன்றுவிடுவதில்லை. நிம்மதி இல்லாமல் மக்கள் அகதிகளாக சிதறி ஓடுவார்கள். நிம்மதியை மனிதன்தான் சிதைக்கிறான். எபபோது முடியும் இந்த நிலை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 21

# சமாதானத்திற்கான போரரசியல் - 5

சந்திரிக்காவுக்கும் ரணிலுக்கும் இடையிலான முரண்பாடுகள் 2000ம் ஆண்டளவில் புதிய கட்டத்தை எட்டியது. இதன் தொடர்ச்சியாக 2001இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க தலைமையிலான ஐ.தே.மு வெற்றி பெற்றது.

இது அக்காலப்பகுதியில் இலங்கையின் தேசிய அரசியல் வரலாற்றில் மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் ஒன்றாகப் பார்க்கப்பட்டது. குறிப்பாக இலங்கை வரலாற்றில் ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்எதிர் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

ஜனாதிபதி நிறைவேற்றதிகாரம் கொண்டவராக இருந்தாலும் பாராளுமன்றமும் அமைச்சரவையும் பிரதமரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இது அதிகார நெருக்கடியை உண்டு பண்ணியது.

தேர்தலில் ஐ.தே.மு.வின் வெற்றியானது, ரணிலின் கீழ் ஐ.தே.க தலைமைத்துவம் மற்றும் கட்சியின் தாராளவாத சமாதான நிகழ்ச்சி நிரல், சமாதான பலன்களுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டது. மக்கள் அங்கீகாரமாகப் பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், ஐ.தே முவினால் வாக்குறுதியளிக்கப்பட்ட சமாதானப் பலன்களை வழங்குவது இலகுவானதாக இருக்கவில்லை, ஏனெனில் அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட உயரடுக்கு பிரிவு மோதல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் அதிக நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

2001 இல், ஐ.தே.முவின் தலைவர் ரணில், சமாதான-பொருளாதார அபிவிருத்தி தளத்தில் பொதுத் தேர்தலில் கண்ட வெற்றியை சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிகளுக்குப் பயன்படுத்த முயன்றார்.

புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அவர் விரும்பிய போதும் ரணில் தனது கூட்டணி உறுப்பினர்களிடமிருந்து அழுத்தத்தை எதிர்கொண்டார். அது வலுவான எதிர்ப்பாக இல்லாத நிலையும், இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் கொண்டிருந்த விருப்பும் தமிழர்களுடனான அரசியல் அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை நோக்கி நகர்வற்கான உந்துதலை அளித்தது.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியிருந்த த.தே.கூ அமைப்பின் தாராளவாத் பொருளாதாரக் கொள்கைகளுக்கான விருப்பு, சர்வதேச சமூகம் குறித்த மிகை நம்பிக்கை ஆகியன சமாதானம் தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தூண்டின.

அதேவேளை எதிர்கட்சிகள் இதைத் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தக் காத்திருக்கிறார்கள் என்பதை நன்கறிந்த ரணில், அதன் அரசியல் போட்டியாளர்களிடமிருந்து விரும்பத்தகாத கவனத்தை நடுநிலையாக்குவதற்கு, முதலில்இலங்கையில் ஏற்பட்ட மோதலை ஒரு 'வட-கிழக்கு யுத்தமாக' வடிவமைத்து, பொருளாதார காரணங்களுக்காக மோதலை தீர்க்க வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்தினார்.

"அபிவிருத்தியினூடான சமாதானம்" என்பதே பிரதான தொனிப்பொருளானது. உலகளாவிய புதிய வலதுசாரிகள் மேலாதிக்கம் செலுத்தும் உலகளாவிய 'தாராளவாத சமாதான' நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பொருந்தக்கூடிய பொருளாதார மூலோபாயத்தையும் தேர்ந்தெடுப்பதற்கு சர்வதேச சமூகத்திலிருந்து ஆதரவையும் அழுத்தத்தையும் விக்கிரமசிங்க எதிர்கொண்டார். 9/11 தாக்குதலுக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் தாராளவாத சமாதான நிகழ்ச்சி நிரல் உறுதிப்படுத்தப்பட்டு, மேற்குலகின் "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்ற உலகளாவிய பிரச்சாரமானது.

2002இல் இலங்கை அரசாங்கமும் புலிகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு இவை முக்கிய காரணங்களாகும். இங்கு விளங்கிக் கொள்ளவேண்டியது யாதெனில் விக்கிரமசிங்கவின் அரசியல் பேச்சுவார்த்தை முன்முயற்சி பொ.முன்னணி அரசாங்கத்தால் (குமாரதுங்கவின் முந்தைய அரசாங்கம்) அமைக்கப்பட்ட அடித்தளத்தின் மீது கட்டப்பட்டது, எனவே அவர் நோர்வேயின் பங்களிப்பை எளிதாக்கினார்.

ஐ.தே.மு அரசாங்கத்தின் கீழ் இந்த புதிய கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கத்திய நாடுகளின் கவனத்தை ஈர்க்க முடிந்தாலும், ஐ.தே.முவின் உள்ளூர் அரசியல் போட்டியாளர்கள் இந்த முயற்சியை வரவேற்கவில்லை.

2002ல் ஐ.தே.மு புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்பே, அதன் போட்டி அரசியல் சக்திகள் (முக்கியமாக ஜனாதிபதி குமாரதுங்கவின் பொ.முன்னணி அரசியல் கூட்டணி, ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி) உடன்படிக்கைக்கு எதிராக பொதுக் கருத்தைத் திரட்டின.

இதற்கிடையில், இந்த நேரத்தில் தமிழ் அரசியல் சக்திகளிடையே வளர்ந்து வரும் பிரிவு மோதல்கள், ஈபிடிபி மற்றும் அதன் பரம அரசியல் எதிரியான த.தே கூ (புலிகளின் பினாமி என அழைக்கப்படும்)

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான நிச்சயமற்ற தன்மைகள், யுத்த நிறுத்தத்திற்கு தெற்கின் எதிர்ப்பு ஆகியன புலிகளின் ஆட்சியின் கீழ் வடக்கில் ஒரு தனிநாடு ஸ்தாபிக்கப்படுவதற்கு யுத்த நிறுத்தம் வழிவகுக்கும் என்ற தவறான அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டது. 2002-2003 போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, பொ.முன்னணியின் இரகசிய ஆசீர்வாதத்துடன், ஜே.வி.பி. யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக பாரிய பொது ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

ஜே.வி.பி மற்றும் ரணிலின் மற்ற அரசியல் போட்டியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம், தேர்தல் பிரச்சாரத்தின் போது ரணில் கட்டியெழுப்ப முடிந்த முந்தைய பேச்சுவார்த்தை சார்பு நிலைப்பாட்டை பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு மாற்ற முடிந்தது.

ஜனாதிபதி குமாரதுங்க தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுக்கு ஆதரவாக தென்னிலங்கை அரசியலை வெற்றிகரமாக அணிதிரட்டியவர், இப்போது ஐ.தே.மு தலைமையின் கீழ் அரசியல் தீர்வுக்கு எதிராக அதே சக்திகளை அணிதிரட்டினார். இறுதியில் ரணிலுக்கும் புலிகளின் தலைமைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பகிரங்கமாக விமர்சித்தவர்கள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிழைப்புக்கு விரோதமான ஒரு கோஷ்டி அரசியல் சூழலை மேலும் ஊக்குவித்தனர். புலிகளுக்கு எதிரான அரச இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முதலாவது பிரிவை குறிப்பாக தாக்கினர்.

ஜே.வி.பி., ஸ்ரீ.ல.சு.க மற்றும் ஏனைய எதிர்தரப்பு அரசியல் கட்சிகள் இந்த குறிப்பிட்ட சரத்தை புலிகள் சுதந்திரமாக மீண்டும் ஆயுதம் ஏந்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவுகிறது என்று கூறி விமர்சித்தன. இந்த வாதமானது தெற்கில் இருந்து சிங்கள மக்களிடமிருந்து ஓரளவு ஆதரவைப் பெற்றது.

அவர்கள் தோல்வியுற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது இதேபோன்ற நிகழ்வுகளையும் பேச்சுவார்த்தை செயல்முறையின் வீழ்ச்சிக்குப் பின்னர் புலிகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறையின் அளவையும் நினைவு கூர்ந்தனர்.

நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் இதற்கெதிரான 'அரசியல் சார்பற்ற தொழில்நுட்ப எதிர்ப்புகள்' என ஒழுங்கமைக்கப்பட்டன. இவை அரசியலமைப்பு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சட்டபூர்வமான தன்மையில் தங்கள் வாதங்களை அடித்தளமாகக் கொண்டிருந்தன.

இவ்வாதங்களின் கருத்துப்படி, புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு முக்கிய அடிப்படை விதிகளை மீறியுள்ளது.

போர் தொடர்பான எந்த ஒப்பந்தத்திலும் நுழைவதற்கு பிரதமருக்கு அரசியலமைப்பு அதிகாரம் இல்லை, ஏனெனில் அத்தகைய அதிகாரங்கள் அரசியலமைப்பு ரீதியாக நிறைவேற்று ஜனாதிபதியின் கைகளில் உள்ளன.

இலங்கையில் 1972 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட ஆயுதக் குழுவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை பயங்கரவாத தடைச்சட்டத்தை மீறும் செயலாகும் என்பதை அவை சுட்டிக்காட்டின.

பல்வேறு குழுக்களால் சுட்டிக்காட்டப்பட்ட இந்தக் குறைபாடுகள் இருந்தபோதிலும், ரணில் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள சம்மதிக்க நோர்வேயின் தொடர்பாடல் வழிகளைப் பயன்படுத்தி புலிகளை அணுக முடிந்தது.

பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புலிகள் மீது விதிக்கப்பட்ட உள்ளக தடையை நீக்குவதாக ஐ.தே.மு அரசாங்கம் புலிகளுக்கு உறுதியளித்தது. உதாரணமாக, கொழும்பை தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்புகள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், இலங்கையின் பூர்வீகத் தமிழர்களின் 'ஏக பிரதிநிதி' என்ற புலிகளின் சுயமாக அறிவிக்கப்பட்ட நிலையை இலங்கை அரசாங்கம் சட்டப்பூர்வமாக்கியது என்று குற்றஞ்சாட்டினர்.

மற்ற தமிழ் குழுக்களின் கோரிக்கைகளை, குறிப்பாக ஜனநாயக அரசியல் ஈடுபாட்டின் மூலம் தமிழ் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் மிதவாத தமிழர்களின் கோரிக்கைகளை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மதிக்கவில்லை என்றும் வாதிட்டனர். தார்மீக உயர்நிலையை எடுத்துக்கொள்வதன் மூலம், புலிகளின் மிருகத்தனமான பாசிச நடைமுறையை அரசு அங்கீகரிப்பதாகவும், புலிகளால் அடிக்கடி பாதிக்கப்பட்ட மாற்று, மிதவாத, ஜனநாயக மற்றும் தாராளவாத தமிழ் குழுக்களை தமிழ் அரசியல் களத்தில் இருந்து வேண்டுமென்றே அகற்ற ஐ.தே.மு முயற்சிப்பதாக இந்த குழுக்கள் குற்றம் சாட்டின.

மேலும், ஐ.தே.மு , புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையானது, வடக்கு மற்றும் கிழக்கில் சர்வாதிகார ஆட்சியை அமுல்படுத்த புலிகளுக்கு ஊக்கமளிப்பதாக அமையும் என அவர்கள் சொன்னார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை, பிராந்திய சிறுபான்மையினரின் மனித உரிமைகளை புலிகள் மீறுவதையும் ஜனநாயக பன்மைத்துவ அரசியலை நிராகரிப்பதையும் அரசாங்கம் வேண்டுமென்றே ஏற்றுக்கொண்டதையும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் குறிக்கிறது. நுறைவாக இவர்கள், அரசாங்கம் 'சர்வாதிகார அமைதிக்கு' வழி வகுத்ததாகவும் புலிகளை ஒரு பாசிச அமைப்பாக மேலும் வளர்த்து வருவதாகவும் குற்றம் சாட்டினர்.

## கடிதங்கள்

### சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்தவும்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பெரியகுளம் கனகராயனாற்றுப் பகுதியில் பல ஏக்கர் காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றினை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிக அளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது

குறித்த பிரதேசத்தில் தொடர்ந்து மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.


சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும், சட்டவிரோதமான மணல் அகழ்வை கட்டுப்படுத்த எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது

யது பாஸ்கரன்





# ராம் கே நாம்






ஜனனி திருச்செல்வம்,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
மூன்றாம் வருட மாணவி,

**இந்தியாவில் அயோத்தியில் இராமர் பிறந்த இடம்மெனக் கருதி பாபர் மசூதியை இடித்து அங்கு ஒரு கோயில் ஒன்று கட்டப்பட்டது. அன்று இருந்த பாரதத்தினர் மிகப் பெரிய ரத யாத்திரையை நடத்தியது டெல்லியில் ஆரம்பித்து அயோத்தி வரை முடிவடைகிறது. அதிலிருந்து பாபர் மசூதியை இடிக்கப்பட்டது வரை ஆனந்த் பட்வர்த்தன் அதை ஒரு ஆவணப்படமாக பதிவு செய்துள்ளார்.**

ஒரு நீண்ட கால பிரச்சனையை மையப்படுத்தி நீண்ட ஆய்வை மேற்கொண்டு தரவுகளை சேமித்து இவ் ஆவணப்படத்தை ஆனந்த் பட்வர்த்தன் வடிவமைத்துள்ளார்

ஆனந்த் பட்வர்த்தன் இயக்கத்தில் 1992 ஆம் ஆண்டு அயோத்தியில் கடவுளின் பெயரால் நடந்த அரசியல் சமூக முரண்பாட்டுத் தன்மையை எடுத்துக் கூறிகின்றது இவ் ஆவணப்படம்

இயக்குனர் ஆனந்த் பட்வர்த்தன் இயக்கத்தில் அயோத்தியில் இராமனின் பெயரை முன்வைத்து இடம்பெற அரசியல் சமூக முரண்பாட்டுத்தன்மையை எடுத்துக் கூறும் ஒரு ஆவணப்படமாகும்.மதம் என்ற பெயரால் எவ்வாறு அரசியல் நடத்துகின்றனர். என்பதை காட்டுவதற்கு இதைவிட சிறந்த ஒரு ஆவணப்படம் எடுக்க முடியாது. இதில் வரும் ஒவ்வொரு நேர்காணலும் ஒவ்வொரு கதையை பிரதிபலிக்கும் வண்ணம் உள்ளது.

கதைக்களம் போராட்டக்காரர்கள் ஒரு புறம் அயோத்தியில் காணப்படும் பள்ளிவாசலை நோக்கி நகர இன்னொரு புறம் பள்ளிவாசலில் அருகாமையில் காணப்படும் போராட்டக்காரர்கள் என இரண்டு கதைக்களங்கள் ஒன்றாக இணைவதாக இவ் ஆவணப்படம் நகர்த்தப்படுகிறது.

இரண்டு கதைகளத்தை வெவ்வேறு காலகட்டத்திற்கு ஏற்ப காட்சிகளாக்கி அதை ஒன்றிணைத்தமையே இவ் ஆவணப்படத்தில் முதல் வெற்றியாகும்.

கதை அயோத்தி எனும் ஒரு இடத்தினை மையமாகக் கொண்டு ஒரு இராமர் கோயிலை ஒரு பள்ளிவாசல் இடித்து கால்வாய் கட்ட வேண்டுமென முஸ்லிம் மக்களின் அனுமதி இன்றி பள்ளிவாசல் உடைக்கப்படுகின்றது அயோத்தி என்பது ராமரின் பூர்வீகம் அங்கு தான் சிலை வைக்க வேண்டும் என்பதே இப் போராட்டம்.

இதில் மக்களுடைய அரசியல் வாதிகளின் கருத்து என பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டி பல் பரிமாண முறையில் கதை நகர்ந்து செல்கின்றது.

நேர்காணலுக்கென ஒரு தனி இடம் ஒதுக்கி அவ்வாறு இல்லாமல் இயற்கையாகவே அவர் அவர்களின் இயல்பு நிலையில் அவர்களின் கருத்துக்களை தெரிவிக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது. ஆவணப்படத்தின் இயல்புத்தன்மையினை போக்கை காட்டுகின்றது

சாதாரண பொது மக்களுக்கு இது ஒரு பெரிய விடயம் அல்ல என்பதை காட்டி அரசியல்வாதிகள் அவ்வாறு இதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி ஒரு இன பிரிவினையை கொண்டு வருகின்றனர் என்பது காட்டப்பட்டுள்ளார்

போராட்ட காலங்களில் எடுக்கப்பட்ட பதிவுகள் அவ் ஆவணப்படத்தின் உண்மை தன்மையை வெளிக்கொணர்வது போல அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கோவில் என்பது மக்களுக்காக அல்ல இது முற்றிலும் கடவுளின் பெயரால் அழைக்கப்படும் சதி என்பதை அழகாக காட்டுகின்றது.

இசை பயன்பாடு எனும் போது இயற்கையான ஒலிகளே அதிகம் காணப்படுகின்றது சன நெரிசலில் எடுக்கப்படும் நேர்காணல்களில் எல்லாம் பின்னணி இசையின்றி இயற்கை ஒலிகள் அதிகம் காணப்படுகின்றது.

இயற்கையான ஒலியுடன் கூடிய நேர்காணல்கள் அனைத்துமே ஒரு முரண்பாட்டுத தன்மையை கூறும் வகையில் அமையப் பெற்றுள்ளது

*Moving Camera* அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நேர்காணலிலும் இறைவன் சார்பான கதை பேசப்படும் போது மற்றொரு நேர்காணலில் அதனை நிரூபிக்க கதை சொல்லப்படுகின்றது. ஒரு நீண்டகால படமாக்கல் உத்தி சிறப்பானது. நேர்த்தியான ஆய்வுகளின் பின்னர் எடுக்கப்பட்ட ஆவணப்படம் காட்சிகள் பெரும்பாலும் அசைவுகளை முன்னெடுத்துகின்றது

*Cut transition* அதிகளவின் பயன்படுத்தப்பட்டுள்ளது

ஒரு உண்மை சம்பவத்தை எவ்வாறு பல கோணங்களில் இருந்து பார்ப்பது அதன் உண்மை என்ன என்பதை நேர்மையாக கூறப்பட்டுள்ளது.

இதில் முதலாவதாக லால்தாஸ் ,என்கின்ற கோயில் பூசாரியில் ஆரம்பித்து விஸ்வ பந்த குப்தா. K.m நையர் போன்ற முக்கிய நபர்களின் நேர்காணலை காணக்கூடியதாக உள்ளது. அந்த ஊரில் இருக்கும் சாதாரண மக்களின் கருத்தில் தொடங்கி பள்ளிவாசலை இடிக்க வந்த வெளியூர் ஆட்கள் உடைய கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி கேட்பவரின் குரல் காட்டப்பட்டு கேள்வி கேட்கும் போதே அவர்களுடைய நடவடிக்கைகளையும் பதிவு செய்துள்ளனர்.

இது இராமர் பிறந்த ஜென்ம பூமி இதை மீட்க வேண்டும் நாம் என பொதுமக்களை தூண்டிவிட்டு இதனை சாதித்துள்ளனர் ஒவ்வொரு நேர்காணலுக்கும் ஒவ்வொரு நோக்கு கேள்விகளை கொடுக்கும் விதம் ஆவணப்படத்திற்கு ஒரு உணர்வுபூர்வமான வடிவம் கொடுத்துள்ளது.

சாதாரண மக்களுக்கு இது ஒரு சாதாரண பிரச்சனை அரசியல் வாதிகளுக்கு இது அரசியல் மேற்கொள்ள ஒரு வழியாக காணப்படுகின்றது. இதனை பொதுமக்களிடம் மேற்கொண்ட நேர்காணலில் காணக்கூடியதாக உள்ளது.

நாங்கள் இங்கு மத வேறுபாடு இன்றி ஒற்றுமையாக இருக்கின்றோம் . அவரவர் கடவுள்களை ஒற்றுமையாக வழிபட்டுக் கொண்டு வருகின்றோம். இந்தப் பிரச்சனைகள் யாவும் வெளி இடங்களில் இருந்து வருபவர்களினாலேயே நடக்கின்றது என சாதாரண மக்களின் புரிதலையும் கொண்டு வந்துள்ளது இவ் ஆவணப்படம்.

ஏற்கனவே இச் சம்பவம் தொடர்பாக வந்த தொலைக்காட்சிகளில் வந்த செய்தி அறிக்கை வெவ்வேறு ஊடகங்களில் வந்த செய்திகளை இவ்ஆவணப்படத்தில் பயன்படுத்தி இருப்பதில் ஆவணப்படத்திற்கு ஒரு தூணாக அமைகிறது.

ஒரு கடவுளின் பெயரைச் சொல்லி எப்படி இன்னொரு மதத்தினுடைய உணர்வுகள் புண்படுத்தப்பட்டன? எப்படி ஒரு மதம் மேலோங்கி நிலையிலேயே மத உணர்வுகளுக்கு அப்பால் அது எப்படி செயல்பட்டது? என்பதை விளக்குவதாக இவ்ஆவணப்படம் காணப்படுகிறது.மேலும் இஸ்லாமியரும் இந்துக்களும் எவ்வாறு சகோதரத்துடன் வாழ்ந்து வந்தார்கள் அவர்களுக்கு இந்த ரத யாத்திரை அதைத்தொடர்ந்து மசூதி இடிக்கப்பட்ட சம்பவமும் அவர்களுக்கு அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்பதையும் அவர் இந்த படத்தில் நிரூபித்துள்ளார்.



# செழித்ததொரு பண்பாடு

அறுபத்து நான்கு கலைகளுக்கு
இங்கே பஞ்சமில்லை...

விஞ்சி நிற்கிறது விண்ணையும் தாண்டி,
மலைகளும் தகர்ந்து சோலையாக
மணம் பரப்புகிறது...
அகம் புறம் என சரி நிகராய் சரி செய்து
சாகசம் செய்கிறது,..

காத்திரமாய் காப்பியங்களை
கற்று கொள்கிறது நெஞ்சம்
வாழ்வியலோடு புரையோடி போன
இலக்கியத்தின் தேடல்கள் தொடர்கிறது...

வரவேற்று உபசரித்து விருந்தளிப்பது
வரவேற்கத்தக்கது
விருந்தினரை விருப்பத்தோடு
உபசரிக்கும் பொழுதுகள்...

பட்டாடைகள் வண்ண வண்ண
அலங்காரத்துடன்
இங்கிதம் சொல்லும் ஆடைகளும்
உன்னதமான பண்பாடுகளும்
செழித்தோங்குகிற...

சிந்து வெளியில் சிந்து பாடி
சிங்கார நடை போட்ட நாகரீகம்...


தேன் மதுர தமிழை பக்தியாய், காதலாய்,
வீரமாய் ஜனனித்த நொடிகள்
சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த
சொத்துக்கள்
கலம்பகம் தொடங்கி மடல் வரைக்கும்
சிற்றிலக்கியத்தின்,தேடல்கள்
சொற்களுக்குள் சுயம்வரம் நடக்கிறது ...

பேச்சு தமிழும் எழுத்து தமிழும்
தேனாகி அமுதாகி உயிராகி
செந்தமிழாய் ஊற்றெடுக்கும்...

செழித்து விட்டது தமிழர் தம்
பண்பாடு இன்றைய
அறிவுமைய நூற்றாண்டில் ...



சிவபிரகாசம்
சசிரேகா



# இன்பம் இதுதான்...

மேகம் சூழ்ந்துநின்று
மின்னல் பூத்திருக்கும்
வெண் பஞ்சு திதறி விழும்
வான்வெளியில் மாக்கோலம்

ஒற்றைக் காலூன்றி மண்ணில்
மரங்கள் குடைவிரிக்கும்
தென்றல் வந்துகாதுகளில்
கதைசொல்லிச் செல்லும்--

வான்வெளியில் தேனமுதாய்
மழை மொக்குகள் காலூன்றும்
குளிர்ந்த நீரோடைகளிலே
கயல் மீன்கள் துள்ளியெழும்..

இயற்கை அழகை இரசித்தபடி
உள்மனம் குதூகலம் கொள்ளும்
இயற்கையழகை உள்வாங்கியபடி
பிரியாதவரம் கேட்டுமறையும்



க.யோகானந்தன்

# கரும்பயம்


கரும்பயம் பிடித்த மனதை
அவர்கள் இன்னும்
வெளுத்த பாடில்லை.
பணமழையில் நனைந்து காய்ந்த
பழக்கம்
கொள்கைகளை விற்றுவிற்று
கழிப்பறைவாளியாக
கதவு மூலையில் மட்டுமே நின்று
கதைசொல்கிறார்கள்.

பிரச்சாரபொய்கள்
நிரம்பிய துண்டுப் பிரசுரங்களில்
சந்தனம் பூச மறக்காதவர்களின்
பின்னால் நடந்து நடந்து
பீமணம் மட்டுமே இங்ஙனம் வரை
நிலைத்து நிற்கிறது.
இந்த தேர்தலும்
இலகுவாக கடந்துபோகும்.

என்னசெய்வது
இந்த முறையும்
என் கரங்களில் கிடைக்கும்
பிரச்சாரத் துண்டுப்
பிரசுரங்களைபடித்துவிட்டு
கடையில் முகச்சவரம்
செய்யும் போது
பக்குவமாககிழித்து
கழிவுகள் துடைக்க
நன்றிஉணர்வோடு
பயன்படுத்திக்
கொள்கிறேன்.



காரையன்
கதன்



# விளக்கொளி

விட்டில் பூச்சிகள் எல்லாம்
சத்தமிட ஆரம்பித்தன
விண்ணைப் பார்த்தேன்
விண்ணப்பம் கோரக்கூட
வெண்ணிலவைக் காணவில்லை...

அகன்ற வானத்தில் அங்கேயொரு
நட்சத்திரம் மட்டும் அதன் ஒளி
எனக்கே தெரியவில்லை
எப்படி கானகத்தை துளைத்து
வந்து
எங்கள் கடைசி ஓட்டில்
விழப்போகிறது?
மகள் முதலாவது கேள்வி
கேட்கிறாள்...

ஆந்தைகளின் அலறலில்
அங்குமிங்கும் பார்த்தபடி
அம்மாவின் மடியில் அசதிபோன்று
அண்ணாந்து விட்டத்தைப்
பார்க்கும்
அன்புத் தங்கைக்கு ஆறுதல்
சொல்லவும்
மனம் வரவில்லை...

கேள்விகளை மீண்டும் மீண்டும்
கேட்டபடியாக சுவரின் ஓரத்தில்
ஒட்டியிருக்கும் பல்லியை
நோட்டமிடும் அப்பாவின்
கூர்மையான பார்வையும்
கும்மிருட்டில் எனக்கு
புலப்படுவதாயில்லை...

ஒளியை எதிர்பார்த்த
எங்கள் ஏக்கங்கள் எல்லாமே
தூக்கத்தில் மறைந்து போனாலும்
ஒற்றை விளக்கொளிதான்
அவனுக்குகை கொடுத்தது
அந்தவொளி கல்வியெனும்
பேரொழியாகி கரைசேர்த்து
ஆம் இப்போது அவனொரு
மருத்துவர்...



இரா.நிதன்
மட்டக்களப்பு



இளம் விளையாட்டு வீரர்களுக்கு

# பைரஹா ஃபாம்ஸ் நன்கொடை




பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி, ஹம்பாந்தோட்டை யூனிவேர்சல் மார்ஷல் ஆர்ட்ஸ் அக்கடமிக்கு (Universal Martial Arts Academy - UMA Academy) ரூ. 200,000 தொகையை நன்கொடையளித்துள்ளது. இப்பிராந்தியத்திலுள்ள அபிலாஷைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு அத்தியாவசியமான விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நன்கொடை உபயோகிக்கப்படும்.

தேசிய பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள் மற்றும் பயின்றுகொண்டிருக்கும் விளையாட்டு வீரர்களைத் தரப்படுத்துவதை இலக்காகக் கொண்டும், சர்வதேச பாடத்திட்டம் தொடர்பான செயல்முறைக் கல்விக்கும் UMA Academy ஏற்பாடு செய்திருந்த இரு நாள் செயலமர்வின் போது இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

ஹம்பாந்தோட்டையிலுள்ள முன்னணி மார்ஷல் ஆர்ட்ஸ் கற்கைநிறுவனமான UMA Academy>திறமைமிக்க விளையாட்டு வீரர்களைத் தோற்றுவிப்பதில் சிறந்த சாதனை வரலாற்றைக் கொண்டுள்ளது. 35 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன், இந்த அக்கடமியின் பயிற்றுவிப்பாளர்கள் பல்வகைப்பட்ட மார்ஷல் ஆர்ட்ஸ் திறமைகளை வளர்க்கும் அமர்வுகளை நடாத்தி வருகின்றனர்.

பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் யாக்கூத் நளீம் அவர்கள் வர்த்தக சமூகப் பொறுப்புணர்வில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பு குறித்து தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கையில், 'வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் விளையாட்டுக்களின் வலிமை மீது பைரஹா ஃபாம்ஸ் நம்பிக்கை கொண்டுள்ளது. கோழி தொடர்புபட்ட எமது தயாரிப்புக்கள் விளையாட்டு வீரர்களுக்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்தை வழங்குவதுடன், அவர்களுடைய பெறுபேற்றுத்திறனுக்கு உந்துசக்தியளித்து, அவர்கள் தம்முடைய இலக்குகளை எட்டுவதற்கு உதவி வருகின்றன. ஹம்பாந்தோட்டையில் இளம் விளையாட்டு வீரர்களை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்ற UMA Academy க்கு ஆதரவளிப்பதில் நாம் பெருமை கொள்கின்றோம்,' என்று குறிப்பிட்டார்.

UMA Academy ஐச் சேர்ந்த எம். எம். முஷ்ஃபீக் கருத்து வெளியிடுகையில், 'பைரஹா ஃபாம்ஸ் வழங்கியுள்ள மனமுவந்த நன்கொடைக்காக நாம் இந்நிறுவனத்திற்கு ஆழ்ந்த நன்றிக்கடன்பட்டுள்ளோம். இந்த உதவியானது எமது விளையாட்டு வீரர்கள் தமது பயிற்சிகளின் போது சிறப்பாகச் செயற்படுவதற்கு தேவையான உபகரணங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு எமக்கு இடமளிக்கும். இளம் திறமைசாலிகளை வளர்த்து, உலகத்தரம் வாய்ந்த விளையாட்டுவீரர்களைத் தோற்றுவிப்பதில் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், இந்த நன்கொடை எமது முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும்,' என்று குறிப்பிட்டார்.

பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சியின் மனமுவந்த பங்களிப்பானது அதன் வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளுடன் ஒன்றியுள்ளதுடன், இளம் விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்கு உதவுவதில் அதன் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அபிலாஷைமிக்க விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை முழுமையாக வெளிக்கொண்டு வருவதற்கு அவர்களுக்கு வலுவூட்டுவதில் இந்த நன்கொடை முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி, இலங்கையில் சுமார் 50 ஆண்டுகளாக பதப்படுத்தப்பட்ட கோழி இறைச்சித் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து வருவதுடன், அதன் தரமான கோழி இறைச்சி மற்றும் பதப்படுத்தப்பட்ட கோழி இறைச்சி தயாரிப்புக்களுக்கு இல்லங்கள் மத்தியில் பிரபலமான நாமமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்நிறுவனம் வழங்கல்சங்கிலியுடன் தொடர்புபட்ட பல்வேறு தயாரிப்புக்களையும், செயல்முறைகளையும் தானே நிர்வகிக்கும் வழியிலான வணிகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. சீரான வளர்ச்சிப்பாதையில் பயணித்துவருகின்ற இந்நிறுவனம், பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்துள்ளது.

Prime குரூப்பின் 'YOLO' நவீன தொடர்மனை

# நிர்மாணப் பணிகள் ஆரம்பம்




Prime குரூப், பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த YOLO செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. கிரிபத்கொட நகரில் நிர்மாணிக்கப்படும் மிகப் பெரிய மற்றும் சொகுசான நவீன வீட்டு தொடர்மனை நகர் திட்டமாக இது அமைந்துள்ளது.

பிரத்தியேகமான வாழிட அனுபவத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்துடன், நிர்மாணப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கொழும்பு நகரின் வானுயர்ந்த கட்டிடங்களில் ஒன்றாக அமைந்திருக்கும் என்பதுடன், பிரத்தியேகமான சமூகத்தில் புதிய நியமங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். YOLO செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் உயர் தர நிர்ணயங்களுக்கமையவும், நீடித்து நிலைத்திருக்கும் வகையிலும் முன்னெடுக்கப்படும்.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் Prime குரூப்பின் தவிசாளரும் இணை தலைமை அதிகாரியும், விசேட விருந்தினர்கள் மற்றும் எதிர்கால உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

Prime Lands (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரந்தெனிய இந்த செயற்திட்டம் தொடர்பில் குறிப்பிடுகையில், "YOLO திட்டத்துக்கான அடிக்கல் நாட்டலுடன், நிர்மாணப் பணிகளை நாம் ஆரம்பித்துள்ளோம். இலங்கையில் எதிர்கால நவீன வாழிட அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நோக்கத்தை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். நாம் வாக்குறுதியளித்தவற்றுக்கு அப்பால் சென்று மேலும் பல அம்சங்களை வழங்குவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். எமது பிரத்தியேகமான 1% கொடுப்பனவு திட்டம், முதல் தடவை வீட்டு உரிமையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சிறந்த வசதியாக அமைந்துள்ளது. முன்னரைவிட சொத்தின் உரிமையாண்மையை கொண்டிருப்பது என்பது இலகுவாக்கப்பட்டுள்ளது. புத்தாக்கமான வழிமுறை என்பது Prime குரூப்பின் உறுதியான நிதித் தன்மையுடன் சாத்தியமானதாக அமைந்துள்ளது." என்றார்.

கிரிபத்கொட நகரில் அமைந்துள்ள YOLO, 13 ஏக்கர் காணியில் 473 வீட்டுத் தொகுதிகளை கொண்டிருக்கும். இதில் பல முதன்மையான அம்சங்கள் அடங்கியிருக்கும். அவற்றில் infinity pool, a premier boling alley - முதலாவது வதிவிட தொடர்மனை அங்கம், வெளியக திரையரங்கு அனுபவத்தை வழங்கும் சினிமா, coffee workspace, fire pit ஐ கொண்ட elevated lounge, பசுமையான தோட்டம், Karaoke Bar, a gym மற்றும் CrossFit centre, single bounce peddle court, நாணயத்தினால் இயங்கப்படும் லோண்டரி மற்றும் மினி மார்ட் ஆகியன அடங்கியிருக்கும்.

இந்தத் திட்டத்தின் இல்லமொன்றின் உரிமையாளராக விரும்புவோர் மற்றும் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் YOLO வின் விற்பனை Galleryக்கு விஜயம் செய்து, தமக்குரிய பகுதியை ஒதுக்கிக் கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். புத்தாக்கமான அலங்கார வடிவமைப்பு, அமைவிடம், நெகிழ்ச்சியான கொடுப்பனவு தெரிவுகள் போன்றவற்றுடன் கொழும்பின் ரியல் எஸ்டேட் சந்தையில் YOLO ஒப்பற்ற வாய்ப்பை பிரதிபலிக்கின்றது.

# மக்கள் மனங்களில் மறைந்தும் மறையாமல் வாழும் டாடா






ச.சேகர்

வியாபாரத் துறையில், மக்களின் நலனுக்கு முக்கியத்துவமளித்து, மக்களுக்காக சேவைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கருமமாற்றுவது என்பது, இன்றைய உலகில் அரிதாகிவிட்டது. அவ்வாறான சூழலில், சமூக நலனுக்கு முன்னுரிமையளித்து செயற்படும் முக்கியமான வியாபாரச் செயற்பாட்டாளர்கள் எண்ணிப் பார்க்கக்கூடியவர்களே உள்ளனர்.

அதில் ஒரு முக்கியமான நபர் அண்டைய நாட்டின் உலகறிந்த ரட்டன் டாடா தனது 86வது வயதில் இயற்கை எய்தினார். 1991 ஆம் ஆண்டில் இந்தியா பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த ஒரு காலகட்டத்தில் டாடா குழுமத்தின் தலைமைப் பொறுப்புக்கு ரத்தன் டாடா நியமிக்கப்பட்டார். அக்கால கட்டத்தில் டாடா குழுமத்தின் செயற்பாடுகள் வெறும் இந்தியாவில் மாத்திரம் அறியப்பட்டதுடன், 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருடாந்த வருமானமாக பெறும் நிறுவனமாக திகழ்ந்தது.

இவர் 2012 ஆம் ஆண்டு வரை சுமார் இரண்டு தசாப்த காலம் டாடா குழுமத்தின் தலைப் பொறுப்பை வகித்ததுடன், அக்காலப் பகுதியில் தமது தூர நோக்குடைய தலைமைத்துவத்தினூடாக, டாடா குழுமத்தை 100 பில்லியன் வருமானமீட்டும் குழுமமாக தரமுயர்த்தியிருந்தார். நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் டாடா குழுமம் இன்று இயங்குவதுடன், உருக்கு இரும்பு (ஸ்டீல்), வாகனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் பாவனைப் பொருட்கள் என டாடா பிரசன்னம் வியாபித்துள்ளது.

1961 ஆம் ஆண்டு டாடா குழுமத்தில் பணியாற்ற ஆரம்பித்த ரத்தன் டாடா, ஆரம்பத்தில் உருக்கு இரும்பு தொழிற்சாலையில், இரும்பு உற்பத்தியில் ஈடுபடும் ஊழியர்களுடன் பணியாற்றியிருந்தார். அவ்வாறு ஆரம்பித்த இவரின் பயணம், டாடா குழுமத்தை சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நிறுவனமாக தரமுயர்த்துவது வரை தொடர்ந்திருந்தது. நாட்டின் கீர்த்தி நாமத்தை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்காக இந்தியாவையும், இந்திய மக்களையும் முன்னிலைப்படுத்திய கொள்கைச் செயற்பாடு, இவரின் வெற்றிக்கு வழிகோலியிருந்தது.

பிரித்தானியாவின் தேயிலை வர்த்தக நாமமான டெட்லி (Tetley), 450 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இவரின் தலைமைத்துவத்தில் கீழ் டாடா குழுமம் கொள்வனவு செய்திருந்தது. இதுவே, சர்வதேச வர்த்தக நாமமொன்றை கொள்வனவு செய்த முதலாவது இந்திய நிறுவனமாக திகழ்ந்ததுடன், சர்வதேச பானத் துறையில் டாடா குழுமத்தின் பிரசன்னத்தையும் உறுதி செய்திருந்தது.

ஐரோப்பாவின் இரண்டாவது மாபெரும் உருக்கு இரும்பு (ஸ்டீல்) உற்பத்தியாளராக திகழ்ந்த கோரஸ் ஸ்டீல் (Corus Steel) நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டில் ரட்டன் டாடாவின் தலைமைத்துவத்தின் கீழ் டாடா குழுமம் கொள்வனவு செய்திருந்தது. அதனூடாக உலகின் மாபெரும் உருக்கு இரும்பு உற்பத்தியாளர்களில் ஒன்றாக டாடா குழுமம் வளர்ச்சி பெற்றது.

ஐரோப்பாவில் புகழ்பெற்ற வாகன வர்த்தக நாமமான ஜக்குவார் லேன்ட் ரோவர் (Jaguar Land Rover) வர்த்தக நாமத்தை டாடா குழுமம் 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்திருந்தது. 2.3 பில்லியன் அமெரிக்க டொலருக்கு இந்த கொள்வனவை பூர்த்தி செய்திருந்தது. அதனூடாக, சர்வதேச வாகனங்கள் உற்பத்தியாளர்களில் ஒன்றாக டாடா குழுமத்தை தரமுயர்த்த முடிந்ததுடன், சொகுசு கார் வர்த்தக நாமங்களிலும் டாடா குழுமத்தின் பிரசன்னத்தை விஸ்தரித்தது.

இந்தியா மற்றும் இந்தியர்களுக்கு முன்னுரிமையளித்து 2008 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் விலை குறைந்த கார் எனும் கொள்கையின் பிரகாரம் டாடா நனோ காரை டாடா குழுமம் அறிமுகம் செய்தது. ரத்தன் டாடாவின் நோக்கான, இந்திய நடுத்தர வருமானமீட்டும் வர்க்கத்தினருக்கு சகாயமான விலையில் நான்கு சர்க்கர வாகனமொன்றை பெற்றுக் கொடுக்கும் வகையில், 1 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கு இந்த கார் அறிமுகம் செய்யப்பட்டது. புத்தாக்கத்தினூடாக மில்லியன் கணக்கான இந்தியர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு இதனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

டாடா குழுமத்தின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட மும்பை தாஜ் சமுத்திரா ஹோட்டல் 2008 ஆம் ஆண்டில் பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்கானது. இதனால் ஹோட்டலுக்கு சேதம் ஏற்பட்டதுடன், அதனை உறுதியாக மீளக் கட்டியெழுப்புவதில் ரத்தன் டாடா முக்கிய பங்காற்றியிருந்தார். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மீது இவர் காண்பித்திருந்த கரிசனையினூடாக, ஊழியர்கள் மற்றும் மக்கள் மீது அவரின் அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டிருந்தது.

வியாபாரத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ரத்தன் டாடா ஆற்றிய பங்களிப்புகளுக்காக அவருக்கு இந்தியாவிலும், சர்வதேச ரீதியிலும் பல விருதுகள் மற்றும் கௌரவிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. பத்ம பூஷன் (2000), பத்ம விபூஷன் (2008), ஐக்கிய இராஜ்ஜியம் இந்திய உறவுகளை மேம்படுத்துவதில் இவர் ஆற்றியிருந்த பங்களிப்புக்கான இரண்டாம் எலிசபெத் மகா ராணியின் KBE கௌரவிப்பு (2009), ஆண்டின் சிறந்த வியாபார தலைமை செயற்பாட்டாளர் (2006), சமாதானத்துக்கான ஒஸ்லோ பிஸ்னஸ் விருது (2010), வாழ்நாள் சாதனையாளர் விருது (2014), வியாபாரத்தில் ஆண்டின் சிறந்த இந்தியருக்கான CNN-IBN விருது (2006) போன்றன இவற்றில் முக்கியமான சிலவாகும்.


வியாபார செயற்பாடுகளுக்கு அப்பால், ஆகாய பறப்பில் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் 2007 ஆம் ஆண்டில், F-16 Falcon பறப்பில் ஈடுபட்ட முதலாவது இந்தியர் எனும் பெருமையை பெற்றுக் கொண்டார். டாடா குழுமத்தின் மனித நேய செயற்பாடுகளில் இவர் ஆழமான ஈடுபாட்டை கொண்டிருந்தார். கல்வி, சுகாதார பராமரிப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி போன்றவற்றில் பங்களிப்பு வழங்கும் டாடா நம்பிக்கை நிதியங்களில் இவர் நேரடியாக ஈடுபட்டிருந்தார். குழுமத்தின் செல்வங்கள் நாட்டுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்திருப்பதை இவர் தமது தலைமைத்துவ காலப்பகுதியில் உறுதி செய்திருந்தார். டாடா சன்ஸ் பங்கிலாபங்களில் 60-65 சதவீதமானவை மனிதநேய செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

ஒழுக்கமான முறையில் தலைமைத்துவமளித்து, வியாபார செயற்பாடுகளை நேர்மையான வழியில் முன்னெடுத்துச் செல்வது என்பதில் ரத்தன் டாடா தீவிரமாக இருந்தார். இவரின் தலைமைத்துவத்தின் கீழ் டாடா குழுமம் நம்பிக்கை, நேர்மை மற்றும் சமூக பொறுப்புணர்வு போன்றவற்றில் நன்கறியப்பட்டது. இந்தியாவில் மாத்திரமன்றி, உலகளாவிய ரீதியில் இவரின் ஒழுக்கமான மற்றும் நேர்மையான தலைமைத்துவம் என்பது பலரையும் கவர்ந்திருந்தது.

இவரின் கொள்கைகள் உறுதியானவை. தமது நிறுவனத்தின் வெற்றிக்காக ஊழியர்களை ஊக்குவிப்பதில் இவர் கையாண்ட வழிமுறைகள் சகலருக்கும் பொருந்தக்கூடியவை. அவரின் சில பொன்னான வார்த்தைகளில், "வேகமாக செல்ல வேண்டுமானால் தனியே செல். நீண்ட தூரம் செல்ல வேண்டுமாயின், இணைந்து செல்", "உன் மீது மக்கள் எறியும் கற்கை சேகரித்து, சொந்த நினைவுச்சின்னத்தை கட்டியெழுப்ப அதை பயன்படுத்து", "வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் எமது பயணத்துக்கு மிகவும் முக்கியம், ஏனெனில் ECG அறிக்கையில் கூட நேர் கோடு என்பதால் உயிர் பிரிந்துவிட்டது என்பதை உணர்த்துகின்றது", "தலைமைத்துவம் என்பது பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகும், மாறாக சாட்டுகளை தெரிவிப்பதல்ல", "வாய்ப்புகளை உங்களை தேடி வரும் வரை காத்திருக்க வேண்டாம், உங்கள் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளுங்கள்", "சரியான தீர்மானங்களை மேற்கொள்வதில் நான் நம்பிக்கை கொள்வதில்லை. தீர்மானங்களை எடுத்துவிட்டு அவற்றை சரியாக்குவேன்" போன்றன அவற்றில் சிலவாகும்.

இவரின் இழப்பு ஈடு செய்யப்பட முடியாதது என்பதுடன், இவரால் வியாபாரம், சமூகம், மற்றும் நாட்டுக்கு ஆற்றப்பட்ட பங்களிப்புகள் எதிர்காலத்திலும் நினைவில் நிலைத்திருக்கும். செல்வத்தை உருவாக்குவது என்பது இவரின் வாழ்நாள் பணியாக இருந்துவிடாமல், இந்தியாவுக்கும் அதன் மக்களுக்கும் பெறுமதியை உருவாக்குவது என்பதாக அமைந்திருந்தது. மறைந்தும் மக்கள் மனங்களில் மறையாமல் இவர் என்றும் வாழ்வார் என்பது உறுதி.













இலண்டன் அரங்கை அலங்கரித்த

# அழகிய அரங்கேற்றம்

கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்

இலண்டன் மாநகரில் The Beck Theatre இல் செல்வி லக்ஷ்மி சத்தியலிங்கத்தின் வயலின் அரங்கேற்றம் 21.09.2024 சனிக்கிழமையன்று வெகுவிமர்சகையாக இடம்பெற்றது.

தெய்வீக இறை வணக்கத்துடன் ஆரம்பித்த இந்நிகழ்வில் முதலாவதாக லக்ஷ்மி சாருகேசி இராகத்தில் அமைந்த லால்குடி ஜெயராமனின் பதவர்ணத்துடன் கச்சேரியைத் தொடங்கினார். காதுக்கினிய கமகங்கள் செவியை நிறைத்தன. அடுத்து 'ஸ்ரீ மகா கணபதிம்' எனும் முத்துசாமி தீட்சிகர் கிருதி, மிக்ஷ்ர சாப்பு தாளத்தில் அமைந்து சபையைக் கிரங்க வைத்தது. கௌளை ராக ரிக்ஷபம் அழகாக இவரால் கையாளப்பட்டது. சொற்கட்டு ஸ்வரங்கள் கற்பனா ஸ்வரங்கள் பாடலுக்கு மெருகூட்டின. தொடர்ந்து கோவர்த்தன கிரிக்ஷம் ஹிந்தோள ராகத்தை அழகிய ராக பாவத்தில் வாசித்து சபையோரை மகிழ்வித்தார். அடுத்து நிரவதி சுகதா சிட்டை, ஸ்வரங்களுடன் இசைத்து சபையோரை உற்சாகப்படுத்தினார்.

பாபநாசம் சிவன் இயற்றிய சௌக்க கால கிருதியான 'சரவண பவ குகனே' எனும் பிரதான உருப்படி, மத்தியமாவதி ராகத்தில் அமைந்திருந்தது. தாள வாத்தியங்களின் அற்புதமான அனுசரணையுடன் கற்பனா ஸ்வரங்கள் ,குறைப்பு, கோர்வை என்பன மிக நேர்த்தியாக லக்ஷ்மியால் கையாளப்பட்டுச் சபையைப் பிரமிக்க வைத்தது. அதனைத் தொடர்ந்து தனி ஆவர்த்தனம் பாடலுக்கு மகுடமாக அமைந்திருந்தது.

இடைவேளையின் பின்னர், இசையரங்கின் முக்கிய அம்சமான ராகம் தானம் பல்லவி இடம்பெற்றது. குரு லால்குடி GJR கிருக்ஷ்ணனின் அழகிய பல்லவியான 'வா கா குகா முருகா சண்முகா பிரியனே மயிலேறி' சண்முகப் பிரியா ராகத்திலும் கண்ட திரிபுட தாளத்திலும் அமைய இதனை லக்ஷ்மி மிகக் கச்சிதமாக இசைத்துச் சபையின் பலத்த கரகோக்ஷத்தைப் பெற்றுக் கொண்டார். நிறைவாக பாரதியாரின் 'சின்னஞ் சிறு கிளியே', லால்குடி ஜெயராமின் பெஹாக் இராக தில்லானா, திருப்புகழ், மங்களம் என்பன மனதிற்கு இன்பத்தைத் தர விழா இனிதே நிறைவேறியது. இந்நிகழ்வுக்கு சங்கீத வித்வான் AGA ஞானசுந்தரம் பிரதம விருந்தினராக வருகை தந்தார். ஸ்ரீ M பாலசந்தர், ஸ்ரீ R N பிரகாக்ஷ் , ஸ்ரீ S அபிராம், செல்வி சுருதி சிவலீலன் ஆகியோர் தாள வாத்தியங்களுடன் அரங்கிசையை மெருகூட்டினர். விழா முழுமையையும் ஸ்ரீமதி ஆனந்தராணி பாலேந்திரா சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். கலாரசிகப் பெருமக்களின் ஆசியுடனும் மகிழ்வுடனும் லக்ஷ்மி பெருமிதத்துடன் அரங்கை நிறைவுசெய்தார்.

லக்ஷ்மிக்கு அமரர் கலாநிதிகாரை செ சுந்தரம்பிள்ளை அவர்கள் தாய்வழி பேரனாவார். அவர் இறைவனடி சேர்ந்த தினமன்று இந்த அரங்கேற்றம் நடைபெற்றமை ஆத்மார்த்த நிகழ்வாகும். சங்கீத கலாநிதி ஸ்ரீ லால்குடி GJR கிருக்ஷ்ணனையும்,சங்கீத கலாவித்தகர் தாயார் ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தையும் குருவாகக் கொண்ட லக்ஷ்மியின் கடின உழைப்பும் , குரு லால்குடி கிருக்ஷ்ணன் அவர்களின் முன்முனைப்பும், பயிற்சி நெறிகளும் அரங்கேற்றத்தின் சிறப்பில் பிரதிபலித்தன. குருவின் வழிகாட்டலில் அமைந்த மனோதர்மம் தேர்ந்தெடுத்த உருப்படிகள், இனிமையான ஸ்வர கோர்வைகளின் அமைப்பு என்பன சபையை எப்போதும் கவர்ந்திருந்தன. சங்கீத கலாநிதி ஸ்ரீ லால்குடி GJR கிருக்ஷ்ணனிற்கு இலண்டனில் இது முதலாவது அரங்கேற்றமென்பதும் பெருமைக்குரிய விடயமாகும்.

# கிழக்கின் பழங்குடிகள்






ச.தனுஷ்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**காப்பிரிகள்.இன்று இலங்கைத் தீவில் அதிகம் உச்சரிக்கப்படாத சொல். ஆனால் இன்றும் அவர்கள் காலனித்துவ வரலாற்றின் உயிரோட்டமான சாட்சிகள்.காலனித்துவம் வெறும் கோட்டைகளையும், கடற்கரையோரப் பீரங்கிகளை மாத்திரம் விட்டுச் செல்லவில்லை. உயிரோட்டமான பறங்கிகள், காப்பிரிகள்,சீனர்கள்,மலாயர்கள் என பல இனக் குழுக்களையும் திருகோணமலை மண்ணில் விதைத்து விட்டிருக்கின்றது. இன்று இவர்கள் அதிகளவில் திருகோணமலை,புத்தளம் ஆகிய இடங்களில் உள்ளூர் மக்களுடன் கலந்து வாழ்கின்றார்கள்.**

போர்த்துக்கீசரால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு காலனித்துவ இலங்கையின் பல வரலாற்றுப் பக்கங்களை நிரப்பிய காப்பிரிகளின் பூர்வீகம் ஆபிரிக்க கண்டம். மானிடவியல் தளத்தில் காப்பிரி (Kaffir) என்பது தென்னாபிரிக்கா மற்றும் மத்திய ஆபிரிக்க நிலப்பரப்பின் பூர்வீகப் பழங்குடியான பாண்டு இனத்தைக் குறிக்கும். இதற்கு மற்றுமொரு விளக்கமும் உண்டு.ஆபிரிக்கக் கண்டத்திற்குள் ஐரோப்பியரின் ஊடுருவல் ஆரம்பமாக முன்பே பல ஆபிரிக்க மக்கள் இஸ்லாத்தை தழுவியிருந்ததாகவும் போர்த்துக்கீசரின் கைக்குள் ஆபிரிக்கா சிக்கிக்கொள்ள அவர்களில் கணிசமானவர்கள் கத்தோலிக்கத்தை ஏற்றிருக்கின்றார்கள்.இஸ்லாத்தை நிராகரித்தவர்களைக் குறிக்கும் கபீர் என்ற அரபு வசைச்சொல் Kaffir ஆகி அது தமிழில் காப்பிரி ஆக உருமாறி இருக்க வேண்டும் என்கின்றார்கள் சிலர். இலங்கையைப் பொறுத்தவரை கபீர் என்பது ஆபிரிக்கப் பரம்பரையைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

கடந்த நாற்பது,ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் வாழ்ந்த காப்பிரிகளின் வாழ்க்கையில் இருந்த ஆபிரிக்க வாசனை இன்று வெகுவாகக் குறைந்துவிட்டது. ஒரு காலத்தில் மாலை நேரங்களில் அவர்களின் பாடல்களும், றபான இசையும் திருகோணமலையின் புற நகரக் கிராமமான பாலையூற்றிற்கு உயிரூட்டும். இன்று எல்லாமே மாறி விட்டாலும் அவர்களின் கொண்டாட்டங்களில் இசைக்கும் நடனத்திற்கும் எப்போதும் தனி இடம் தொடர்கின்றது.அவர்களின் வாழ்க்கை முறையை காலம் கரைத்துச் செல்ல தோற்றங்களிலும் மாற்றம் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது. கருநிற உடலமைப்பு,தடித்த உதடுகள்,சுருள் முடியென இருந்த துடிப்பான ஆபிரிக்க உயிரியல் அடையாளங்களும் கலப்புத் திருமணங்களால் மறைந்து கொண்டிருக்கின்றனர்.

-**காப்பிரிகள் தங்கள் அடையாளங்களை சுமக்க விரும்பவில்லை. "ஆபிரிக்கப் பண்பாட்டை நாம் ஏன் சுமக்க வேண்டும்".என தற்போது திருகோணமலையில் வாழ்கின்ற காப்பிரி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். "நாம் தமிழர்களின் பண்பாட்டுக்குப் பழக்கப்பட்டவர்கள்.ஆபிரிக்கப் போர்வீரர்கள் இலங்கைச் சுதேசிகளுடன் ஏற்படுத்திய கலப்புத் திருமணங்களின் வாரிசுகள்தான் நாம்" என வாதிடுகின்றனர்.**

## காப்பிரிகள் எவ்வாறு இலங்கைக்கு வருகை தந்தனர்?

காப்பிரிகளின் வருகை போர்த்துகீசர் காலத்தில் இருந்தே ஆரம்பமாகின்றது. காப்பிரிகள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றார்கள்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களின் முதல் காலடித் தடங்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் தான் பதிந்திருக்கின்றன. போர்த்துக்கீசரால் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட காப்பிரிகள் கோட்டைகள் அமைத்தல் மற்றும் படைத்துறையிலும் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். போர்த்துக்கீசப் படைத் தளபதி டிகோடி மெல்லோ டி கஸேர்ரா 27.03.1638 இல் கண்டி மீது படையெடுத்தபோது அதில் 300 காப்பிரிகள் பங்கேற்றதாக இலங்கை வரலாறு சொல்கின்றது. இலங்கை போர்த்துக்கீசரிடம் இருந்து டச்சுக்காரர்களின் கையில் விழ, காப்பிரிகளும் டச்சு கிழக்கிந்திய கம்பனியில் இணைக்கப்பட்டார்கள். டச்சு கிழக்கிந்திய கம்பனிக்கு ஆபிரிக்க அடிமைகளை இலங்கைக்குள் கொண்டு வருவதில் அதிக அக்கறை இருந்திருக்கின்றது டச்சுப்படையில் இருந்த காப்பிரிகளின் எண்ணிக்கையே 4000 ஆகும்.

1815 - 1817 க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு ஏற்பட்ட நிதிமுடக்கம் காப்பிரிகள் அதிகளவில் இருந்த படையணிகள் கலைக்கப்படக் காரணமாகியது. வறுமையும், வேலையின்மையும் அதனைத் தொடர்ந்து 1820 இல் திருகோணமலையில் ஏற்பட்ட கடும் வரட்சியும் காப்பிரிகளின் வாழ்க்கையை மாற்றி அமைத்தது. வாழ்வைத் தக்க வைக்க அவர்களுக்கு கொள்ளையும்,களவும் கைகொடுத்தது.

போர்த்துக்கீசர்,டச்சுக்காரர்களைத் தொடர்ந்து இலங்கையில் இருந்த ஆங்கிலேயருக்கும் அடிமை மோகம் உருவாகியது. பிரித்தானியாவின் முதலாவது ஆளுநர் பிரட்றிக் நோத் தலைக்கு 125 ஸ்பானிய டொலர் விலைப்படி 500 காப்பிரிகளை மொசாம்பிக் அடிமைச் சந்தையில் பேரம்பேசி வாங்கிக்கொண்டார் என்கின்றது ஆங்கில வரலாறு.கறுவாவும்,சிறிதளவு பணமும் கொடுத்து ஒரு பண்டமாற்றுப் பொருள் போன்று ஆபிரிக்க மனிதர்கள் அடிமைச் சந்தையில் விலை பேசப்பட்டார்கள்.

## திருகோணமலையில் காப்பிரிகளின் கடந்தகால வரலாறு என்ன?

பிரட்றிக் நோத்தைத் தொடர்ந்து இலங்கையின் ஆளுநராகப் பதவியேற்ற Bestowd மேலும் அடிமைகளைக் கொண்டு வந்தார். போர்த்துக்கீசரின் கோவா அடிமைச் சந்தையில் பணத்திற்கும்,பண்டத்திற்கும் அடிமைகள் விற்கப்பட்டதால் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனிக்கு வேண்டும் போதெல்லம் கோவாவில் இருந்து அடிமைகளை திருகோணமலை வழியாக இலங்கைக்குள் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

டச்சுக்காரர் காலத்தில் காப்பிரிகள் மத்தியில் வன்முறைக் குழுக்கள் இருந்ததை திருகோணமலையின் டச்சு ஆளுநர் வான் சாண்டன் (1786) தன் டயரிக் குறிப்பேட்டில் எழுதியிருக்கின்றார். காப்பிரிகள் நிலாவெளியில் உள்ள சிறிய மலையொன்றில் இருந்தவாறு திருகோணமலை, யாழ்ப்பாண தவளவணிகர்களைத் தாக்கி கொள்ளையடித்திருக்கின்றார்கள். பொதிமாட்டு வணிகர்களே தவளவணிகர்கள் என அழைக்கப்பட்டனர். திருகோணமலையின் கப்பற்துறையில் காப்பிரிகளின் அட்டகாசத்தால் அங்கு வாழ்ந்த தமிழர்கள் தங்கள் குடியிருப்புக்களை விட்டு ஓடியிருக்கின்றார்கள் என்கின்றார் ஆளுநர் வான் சாண்டன்.சீனர்கள், காப்பிரிகள், பறங்கிகள் என பல்லினச் சமூகக் கட்டமைப்பு திருகோணமலைக்கு அழகு சேர்த்திருந்த காலமும் வரலாறாகிக் கொண்டிருக்கின்றது. காப்பிரிகள் காலனித்துவத்தின் ஓர் உயிரியல் அடையாளமாகும்.

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் பாலையூற்று மற்றும் கப்பற்துறை பகுதிகளில் வாழும் காப்பிரி வம்சாவழியைச் சேர்ந்த மக்களுடைய வாழ்வியலில் பல மாற்றங்கள் இடம்பெற்றமையை களப்பயணத்தில் அவதானிக்க முடிந்தது.இம்மக்கள் தம்மை காப்பிரிகளாக அடையாளப்படுத்த முன்வருவதில்லை: மாறாக தம்மை இலங்கை பிரஜையாகவே அடையாளப்படுத்த முனைகிறார்கள்.கல்வியிலும் தொழில்முறையிலும் முன்னறிவுள்ளனர்.காலவோட்டத்தில் தமது வம்சாவழி மரபுகளிலும் மாற்றங்களை உட்பகுத்தி செல்கின்றனர்.இன்றும் மாற்றம் அடையாத விடயமெனின்,அது அம்மக்களது கலை உணர்ச்சி மட்டுமே ஆகும். மகிழ்ச்சியான தருணங்களில் ஆண்கள் பாட,பெண்கள் ஆடும் பைலா நடனம் இன்றும் மங்காதுள்ளது. இதற்காக இம்மக்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகள் மிக எளிமையானவை.சிரட்டைகள், தகர டப்பாக்கள்,றபாணம் போன்றன இசைக்கருவிகளாகும். இலக்கணம் மீறிய அவர்களது இசையில் ஈர்ப்புக்கும், துள்ளலுக்கும் பஞ்சம் இருக்காது

தற்கால காப்பிரி தலைமுறையினர் தமது முன்னோர்கள் கடைப்பிடித்த பல விடயங்களையும் மொழியையும் கைவிட்டு வருகின்றனர்.ஏனெனில் தமது சந்ததியினரின் எதிர்கால வாழ்க்கைக்கு தமது வம்சமும் அடையாளமும் ஒரு தடையாக அமையக்கூடாது என்பதில் மிகக் கருத்தாயுள்ளனர்.தமது மரபார்ந்த அடையாளம் மங்கிச்செல்கிறதே என்னும் கவலை ஒரு புறம் இருக்க, மறுபுறம் தமது எதிர்கால சந்ததியினரின் கல்விக்கும் அந்தஸ்துக்காகவும் தமது அடையாளத்தை வெளிப்படுத்தாது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். CODE-காப்பிரிகள் என்னும் சமூகக் கட்டமைப்பு திருகோணமலைக்கு அழகு சேர்த்திருந்த காலமும் வரலாறாகிக் கொண்டிருக்கின்றது. காப்பிரிகள் காலனித்துவத்தின் ஓர் உயிரியல் அடையாளமாகும்.

இந்தியா

“இந்தியாவின் உண்மையான

# மகன் இன்று இல்லை”

## ரத்தன் டாடாவுக்கு ரஜினி இரங்கல்



மறைந்த பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடாவுக்கு அரசியல் தலைவர்கள், பல்துறை பிரபலங்கள் சாமானிய மக்கள் வரை பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் நடிகர் ரஜினிகாந்த் தனது எக்ஸ் தளத்தில் இரங்கல் பதிவிட்டுள்ளார்.

“உலக வரைபடத்தில் இந்தியாவை தனது தொலை நோக்குப் பார்வையாலும், ஆர்வத்தாலும் இடம்பிடிக்க வைத்தவர். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை ஊக்கப்படுத்தியவர், லட்சக்கணக்கான தலைமுறைகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தவர். அனைவராலும் மதிக்கப்பட்ட மனிதர். அந்த சிறந்த மனிதருடன் நான் செலவழித்த ஒவ்வொரு நொடிகளும் போற்றுதலுக்குரியவை. அவருக்கு ஆழ்ந்த இரங்கல்கள். இந்தியாவின் உண்மையான மகன் இன்று இல்லை” என குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா



பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு □ 20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, டெல்லியில் புதன்கிழமை (09) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இந்தியா: 221/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிதிஷ் குமார் ரெட்டி 74 (34), ரிங்கு சிங் 53 (29), ஹர்திக் பாண்டியா 32 (19), ரியான் பராக் 15 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 2/16 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 2/36 [4])


பங்களாதேஷ்: 135/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மகமதுல்லா 41 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: வருண் சக்கரவர்த்தி 2/19 [4], நிதிஷ் குமார் ரெட்டி 2/23 [4], வொஷிங்டன் சுந்தர் □ [1], அபிஷேக் ஷர்மா 1/10 [2], ரியான் பராக் 1/16 [2], அர்ஷ்டீப் சிங் 1/26 [3], மாயங்க் யாதவ் 1/30 [4])

போட்டியின் நாயகன்: நிதிஷ் குமார் ரெட்டி

இந்தியா

கூகுள்-பே மூலம் இலஞ்சம் வாங்கிய

## வைத்திய அதிகாரி கைது



கேரளா - கொல்லம் மாவட்டம், கருநாகப்பள்ளி பகுதியில், கூகுல் பே மூலம் இலஞ்சம் பெற்ற வைத்திய அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இடுக்கி மாவட்ட வைத்திய அதிகாரியாக பணியாற்றிய மனோஜ்(வயது52) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மூணாறு, சித்திராபுரம் பகுதியில் செயற்பட்டுவரும் ஒரு ரிசார்ட் தகுதி சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருந்தது.



மகாராஷ்டிரா

## ரத்தன் டாடாவுக்கு பாரத ரத்னா விருது

### மகாராஷ்டிரா அமைச்சரவை வலியுறுத்தல்

மறைந்த ரத்தன் டாடாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என மத்திய அரசை, மகாராஷ்டிர அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது.

அவரது உடலுக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்நிலையில், முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மும்பையில் கூடிய மகாராஷ்டிர அமைச்சரவை, தொழிலதிபர் ரத்தன் டாடாவுக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்க மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடருக்கான

# இலங்கைக் குழாமில் ராஜபக்‌ஷ, வண்டர்சே

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தமது இருபதுக்கு □ 20 சர்வதேசப் போட்டிக் குழாமில் பானுக ராஜபக்‌ஷவையும், ஜெஃப்ரி வன்டர்சேயையும் இலங்கை மீள அழைத்துள்ளது.

இதேவேளை அணியின் முன்னாள் தலைவரான தசுன் ஷானக குழாமில் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் மென்டிஸ், குசல் பெரேரா, கமிந்து மென்டிஸ், தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்ணாண்டோ, பானுக ராஜபக்‌ஷ, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்‌ஷன, டுனித் வெல்லலாகே, ஜெஃப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, நுவான் துஷார, மதீஷ பத்திரண, பினுர பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ.



# யுனைட்டெட் செல்லும் முவானி?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான றண்டல் கொலோ முவானியைக் கைச்சாத்திட 58.6 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை வழங்க இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஐன்ரச்ட் பிராங்க்பேர்ட்டிலிருந்து ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றில் பரிஸ் ஸா ஜெர்மைனில் கடந்தாண்டு 25 வயதான முவானி இணைந்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க

பைடன் – நெதன்யா

## உரையாடல் நிறைவு



இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதலை மையப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் இடையேயான தொலைபேசி உரையாடல் நிறைவுக்கு வந்துள்ளதாக, வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் சமீபத்தைய தாக்குதலுக்கு பின்னர் ஜோ பைடனுடன் இடம்பெறும் முதலாவதும் முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலாக இது கருதப்பட்டது.

குறித்த கலந்துரையாடல் புதன்கிழமை (9) இடம்பெற்றது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இந்த கலந்துரையாடல் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கலந்துரையாடல் தொடர்பிலான தகவல்கள் விரைவில் வெளியாகும் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது

இந்த கலந்துரையாடலில், கமலா ஹரிஸ் கலந்துக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.





பிரித்தானியா

பிரித்தானியாவில்

## தமிழாசிரியருக்கு சிறை

பிரித்தானியாவில், தகாத செயற்பாட்டில் ஈடுபட்ட தமிழ் ஆசிரியர் ஒருவருக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா - குறொய்டன் பகுதியை சேர்ந்த 51 வயதான ஜேக்கப் தனுகரன் எனும் நபருக்கே, இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை உடல் ரீதியாக தவறான முறைக்கு உட்படுத்தினார் உள்ளிட்ட 08 குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காசா

காசாவில் 2மில்லியன் மக்கள்

## பட்டினியால் அவதி

காசாவில், 2 மில்லியன் மக்கள் அவசர உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் பட்டினியால் வாடுவதாகவும், ஐ. நா அறிக்கை வெளியிட்டுள்ளது.

காசாவில், 60 சதவீதத்துக்கும் அதிகமான விளைநிலங்கள் தொடர்ச்சியான மோதலால் சேதமடைந்ததை அடுத்த இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகளின் செயற்கைக்கோள் மையம் (UNOSAT) ஆகியவற்றால் சேகரிக்கப்பட்ட செயற்கைக்கோள் தரவுக்கு அமைய இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இதில் 52.5 சதவீத விவசாய கிணறுகளும், 44.3 சதவீத பசுமை விளைநிலங்களும் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான்





இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முல்தானில் திங்கட்கிழமை (07) ஆரம்பித்த இப்போட்டியில் வியாழக்கிழமை (10) நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து தொடர்ந்தும் ஓட்டங்களைப் பெற்ற ஜோ றூட்டை 262 ஓட்டங்களுடன் இழந்தது.

பின்னர் அடுத்து வந்த ஜேமி ஸ்மித் 31 ஓட்டங்களுடன் நசீம் ஷாவிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில் தொடர்ந்து ஓட்டங்களைக் குவித்த ஹரி ப்றூக் 317 ஓட்டங்களுடனும், அடுத்து வந்த குஸ் அட்கின்ஸனும் சையூம் அயூப்பின் ஒரே ஓவரில் வீழ்ந்தனர்.

அந்தவகையில் தமது முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 823 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இங்கிலாந்து இடைநிறுத்தியது.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், இனிங்ஸின் முதலாவது பந்திலிருந்தே கிறிஸ் வோக்ஸ், குஸ் அட்கின்ஸன் (2), பிறைடன் கார்ஸ் (2), ஜேக் லீச்சிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நான்காம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்தின் முதலாவது இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட 115 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. தற்போது களத்தில் சல்மான் அலி அக்ஹா 41 ஓட்டங்களுடனும், ஆமீர் ஜமால் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காத்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை11, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.